**காஞ்சிபுரம், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.பா.லிங்கேஸ்வரன், எம்.எஸ்.சி.,**

**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்குத் தேர்வு - 2018-2019 மற்றும் 2019-2020 வரையிலான காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – காஞ்சிபுரம், தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்திற்கு இளநிலை உதவியாளராக செல்வி.ச.தமிழரசி பணி நியமனம் செய்யப்பட்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணி வரன்முறை செய்தும் - தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது.

---

அ / 882 /2020

நாள்: .10.2021

படிக்கப்பட்டது :

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.2387/PSD-1/ 2020, நாள்.28.05.2020.
2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஜி3/16386/2020-1, நாள்.29.07.2020.

* * * * *

**ஆணை:**

பார்வை (1)-ல் காணும் கடிதத்தின்படி சென்னை, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு 2018-2019 மற்றும் 2019-2020 வரையிலான காலத்திற்கு செல்வி.ச.தமிழரசி என்பவர் தேர்வு செய்யப்பட்டு, தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்து பார்வை (2)-ல் காணும் செயல்முறை ஆணைகளின்படி, காஞ்சிபுரம் தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு, 07.08.2020 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து கொண்டார்.

அன்னாரது தெரிவு உறுதி செய்யப்படுவதாக மேலே (1)-ல் படிக்கப்பட்ட தேர்வாணைய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதால், அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த 07.08.2020 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்யப்பட வேண்டும்.

மேலும், தனியரது பணியினை கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்யப்படுவதாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவுறுத்தியுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Coimbined Civil Service Examination-IV for the year 2018-19 and 2019-2020".

Scanned by TapScanner

எனவே, தனியரது பணியினை சென்னை/மதுரை கிளை, உயர்நீதிமன்றங்களில் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள்-IV-ல் தெரிவித்ததற்கெதிரான நிலுவையில் உள்ள ரிட் மனுக்களின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டு தனியருக்கு கீழ்க்கண்டவாறு பணி வரன்முறை செய்யப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | செல்வி.ச.தமிழரசி,<br>இளநிலை உதவியாளர்,<br>தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) அலுவலகம், காஞ்சிபுரம். | 07.08.2020 முற்பகல் | 07.08.2020 முற்பகல் |

மேலும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி 23(a)(i)-ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் பொது விதி 32-ன் படியும் மேற்படி பணியாளர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் மூன்று ஆண்டு கால தொடர் பணியில் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது. .

மேற்படி தகுதிகாண் பருவ காலத்தில் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படை பயிற்சியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

8.10.21.

தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்),
காஞ்சிபுரம்.

8/10/2021

<u>பெறுநர் :</u>
செல்வி.ச.தமிழரசி, இளநிலை உதவியாளர்,
இவ்வலுவலகம்.

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது.</u>

1) தொழிலாளர் ஆணையர், சென்னை-6.
2) கூடுதல் தொழிலாளர் ஆணையர், சென்னை-6.
3) தொழிலாளர் இணை ஆணையர்-2, சென்னை-6.

<u>நகல்</u>

பணிப்பதிவேடு / இருப்புக்கோப்பு / உதிரி.

Scanned by TapScanner